# FIRST INFORMATION REPORT

**முதல் தகவல் அறிக்கை**

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

**TAMIL NADU POLICE**

INTEGRATED INVESTIGATION FORM-I

C 8110274

1. District : Chennai மாவட்டம் PS: Chennai City-I காவல்நிலையம் Year: 2020 ஆண்டு FIR No.: 03/AC/2020/CC-I மு.த.அ. எண் Date: 01-11-2020 நாள்

2. (i) Act சட்டம்: Cr.P.C. Sections பிரிவுகள்: 102
   (ii) Act சட்டம்: Prevention of Corruption Act (Amendment) 2018 Sections பிரிவுகள்: 7 and 7 (A)
   (iii) Act சட்டம்: — Sections பிரிவுகள்: —
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் Date from : நாள் முதல் Date to : 31-10-2020 நாள் வரை
   Time Period : 19.00 hrs. நேர அளவு Time from : நேரம் முதல் Time to : நேரம் வரை
   (b) Information Received at PS. Date : 01-11-2020 காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் Time : 16.00 hrs. நேரம்
   (c) General Diary Reference : Entry No(s) 01-11-2020 பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Time : 16.00 hrs. நேரம்

4. Type of Information : Written/ Oral : Written Complaint
   தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: Direct Paddy purchase centre at Pullarambakkam, Thiruvallur District
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் (b) Address : முகவரி
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : Tr. S. Kotteeswaran (b) Father's/ Husband's Name :
   குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் தந்தை / கணவர் பெயர்
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு (d) Nationality : Indian நாட்டினம் (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண்
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் Place of Issue : வழங்கப்பட்ட இடம்
   (f) Occupation : Deputy Inspection Cell officer தொழில் (g) Address : o/o District Inspection cell, Kancheepuram, Chengalpet & Thiruvallur District முகவரி

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   1). M. Thanigaivel, Seasonal Bill clerk, Tamil Nadu Civil supplies Corporation.
   2). G. Dilli, S/o Govindasamy, No. 227, Srinivasan street, pullarambakkam, Thiruvallur District. 3) Rajkumar, Purchasing officer, Tamil Nadu Civil supplies Corporation, Thiruvallur.

8. Reasons for delay in reporting by the complainant / Informant: No Delay
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   —

GCP-240-34(Type-2) 90,000 Cps.-21.3.16(HCL-12)

**FIR Continuation (Coloumn-12)**

Today 01.11.2020 at 16.00 hrs, when I was on duty at my office of DVAC, Chennai City-I Detachment, I received the endorsement order of the Deputy Superintendent of Police, Chennai Cituyy-IV, Vigilance and Anti Corruption for register case and & report dt.01.11.2020, consequent to the tapal containing the compliant of Thiru.S.Kotteeswaran, Deputy Inspection Cell Officer, O/o the District Inspection Cell, Kancheepuram, Chengalpet & Tiruvallur District, dated:01.11.2020 enclosed with proceedings of the Joint Surprise Check conducted at the O/o. The Tamil Nadu Civil Supplies Corporation Direct Paddy Purchase Centre at Pullarambakkam, Thiruvallur District on 31.10.2020 between 19.00 hrs. and 00.30 hrs. Statements and copies of records. The report of Deputy Inspection Cell Officer and proceedings runs as follows:- From S.Kotteeswaran, Deputy Inspection Cell Officer, O/o the District Inspection Cell, Kancheepuram, Chengalpet & Tiruvallur District, to The Deputy Superintendent of Police, Vigilance and Anti Corruption, Chennai City-IV Dett., Chennai-16 Lr.No.A/291/2020, dated 01.11.2020 Sir, Sub-Joint Surprise Check conducted on 31.10.2020 at Direct Paddy Purchase Centre, Pullarambakkam, Tiruvallur District, Report, forwarded reg. I state that on 31.10.2020 a joint surprise check was conducted at the O/o. the Direct Paddy Purchase Centre, Pullarambakkam, Tiruvallur District along with the Deputy Superintendent of Police, V & AC, CC – IV Detachment, Chennai -16 and his team between 19.00 hrs. and 00.30 hrs. During the joint surprise inspection an amount of Rs.1,07,300/- was seized and the incriminating documents were seized. I herewith sent the proceeding drawn during the time of Joint Surprise Inspection conducted on 31.10.2020 and the properties namely Rs.1,07,300/- (Rupees One Lakh Seven Thousand and Three Hundred Only) with incriminating documents for further course of action. Enclosure 1) Original Proceeding, dt.31.10.2020, 2)Cash Rs.1,07,300/- 3) Documents seized during the joint surprise check, 4) Statement of Witnesses Kindly acknowledge receipts of the same. (Sd/-) XXXX Deputy Inspection Cell Officer, Kancheepuram, Chengalpet & Tiruvallur District. காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும்

கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-**IV**, காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று 31.10.2020 திருவள்ளூர் மாவட்டம், புல்லரப்பாக்கம், காமராஜர் தெரு, **Rice Mill Compund**, சுப்பிரமணிய முதலியருக்கு சொந்தமான செல்வவிநாயகர் **Rice Mill**லிருந்த இடத்தில் இயங்கும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், திருவள்ளூர் மண்டலத்தின் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை கூட்டுத்தணிக்கை.

| | |
|---|---|
| இருதுறை கூட்டுத்தணிக்கை மேற்கொண்ட அலுவலர்கள்: | (1) திரு.க. கோட்டிஸ்வரன்,<br>மாவட்ட துறை ஆய்வுக்குழும அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம்.<br><br>(2) திரு.ம.வெற்றி செழியன்,<br>காவல் துணைக் கண்காணிப்பாளர், சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.<br><br>(3) திரு. A.சிவஆனந்த்,<br>காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.<br><br>(4) திருமதி. C.சசிகலா,<br>காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.<br><br>(5) திருமதி.T. பவானிதேவி,<br>காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16. |

திருவள்ளூர் மாவட்டம், புல்லரப்பாக்கம், காமராஜர் தெரு, Rice Mill Compund, காலம் சென்ற சுப்பிரமணிய முதலியருக்கு சொந்தமான செல்வவிநாயகர் Rice Mill என்ற

முகவரியிலுள்ள நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில், அதன் எல்லைக்குட்பட்ட கிராமங்களான புல்லரபாக்கம், பூதூர், காந்திநகர், சிறுவானூர், திருபாச்சூர், கண்டிகை, மோவூர், திருமாழிசை, கொசவண்பாளையம் முதலிய கிராமங்களில் அரசின் பருவகால நெல் கொள்முதல் அடிப்படையில் செப்டம்பர் மாதம் முதல் தொடங்கி அக்டோபர் மாதம் வரை, மேற்படி கிராமங்களின் விவசாயிகளிடமிருந்து அரசு நிர்ணயித்த விலையில் ஒரு நெல் மூட்டை கொள்முதல் செய்ய ஒவ்வொரு விவசாயிடமிருந்து ரூ.50/- முதல் ரூ.70/- வரை லஞ்சம் பெறுவதாக வந்த நம்பகமான தகவலின் அடிப்படையில் மேற்படி நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்ட ஆய்வுக்குழும அலுவலர் மற்றும் சென்னை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை நகரப் பிரிவு-IV, காவல் துணைக் கண்காணிப்பாளர் இணைந்து இன்று (31.10.2020) சுமார் 19.00 மணியளவில் இருதுறை திடீர் கூட்டாய்வு மேற்கொள்ளப்பட்டது.

மேற்படி நேரடி நெல் கொள்முதல் நிலையமானது திருவள்ளூர் ஊத்துக்கோட்டை நெடுஞ்சாலையில் புல்லரப்பாக்கம் கிராமத்தில் காமராஜர் தெருவில் உள்ள Rice Mill Compundல் அமைந்துள்ளது. இந்த காமராஜர் தெருவானது கிழக்கு மேற்க்காக செல்கிறது. இந்த தெருவில் கொள்முதல் நிலையமானது தெற்கு பார்த்தார்போல் ஒரு சிறிய நுழைவாயிலும், பிரதான நுழைவாயிலும் கொண்டுள்ளது. சிறிய நுழை வாயில் ஆட்கள் வருவதற்கும், மற்றொரு பிரதான நுழைவாயில் லாரி வருவதற்குமாக அமைந்து உள்ளது. இந்த நிலையத்தின் மத்தியில் அமைந்த நெற்களத்தில் சுமார் 10,738 எண்ணிக்கையுடைய நெல் மூட்டைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தது. இந்த கொள்முதல் நிலையத்தில் வடக்கு தெற்க்காக சிமெண்ட் Sheet போட்ட கல்லால் கட்டப்பட்ட கட்டிடம் கிழக்கு பக்கம் பார்த்தாற்போல் இரண்டு வாசல்களுடன் உள்ளது. அதில் வடக்கு பக்கம் உள்ள அறையில் பருவகால பட்டியல் எழுத்தரின் அறை அமைந்துள்ளது. இந்த அறைக்கு தெற்கே அட்டை பெட்டி செய்யும் கம்பெனி உள்ளது. இந்த நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் கூட்டுத் தணிக்கையின் போது திரு.M.தணிகைவேல், பருவகால பட்டியல் எழுத்தர் அவர்கள் ஆஜரில் இருந்தார். அவரது அறையை சோதனை செய்தபோது பருவகால பட்டியல் எழுத்தரின்

அறையிலும், திரு.தணிகைவேல் உடைய காரிலும் கீழ்காணும் கணக்கில் வராத லஞ்ச பணமும், அங்கு வந்திருந்தவர்களிடம் திரு.தணிகைவேலுக்கு கொடுக்க லஞ்ச பணமும் இருந்தது.

| வரிசை எண் | யாரிடமிருந்து கைப்பற்றப்பட்டது | எவ்வளவு கைப்பற்றப்பட்டது | எந்த இடத்திலிருந்து கைப்பற்றப்பட்டது. |
|---|---|---|---|
| 1) | திரு.டில்லி என்பவர் தனது ஆடையிலிருந்து வெளியில் தூக்கிப்போட்ட பணம். | ரூ.60,000/- [ 22 X Rs.2000; 32 X Rs. 500] | பருவகால பட்டியல் எழுத்தரின் அறையிலிருந்து |
| 2) | திரு.டில்லி என்பவரின் பாக்கெட்டிலிருந்து இருந்து எடுத்து ஆஜர்படுத்தியது. | ரூ.6,600/- [12 X Rs.500; 3 X Rs. 200 ] | பருவகால பட்டியல் எழுத்தரின் அறையிலிருந்து |
| 3) | திரு.M.தணிகைவேல், அவரது அறையின் Own Table Right Side Drawerலிருந்து எடுத்து ஆஜர்படுத்தியது. | ரூ.16,030/- [32 X Rs.500; 1 X Rs.20; 1 X Rs.10] | பருவகால பட்டியல் எழுத்தரின் அறையிலிருந்து |
| 4) | திரு.செல்லையன் என்பவர் எடுத்து ஆஜர்படுத்தியது. | ரூ.15,000/- [ 30 X Rs.500] | பருவகால பட்டியல் எழுத்தரின் அறையிலிருந்து |
| 5) | திரு.செல்லையனின் மகன் அரியிடம் என்பவர் எடுத்து ஆஜர்படுத்தியது. | ரூ.1,16,000/- [58 X Rs.2000] | பருவகால பட்டியல் எழுத்தரின் அறையிலிருந்து |
| 6) | திரு.M.தணிகைவேல், அவர்களின் சொந்த காரிலிருந்து எடுத்தது. | ரூ.4,020/- [ 8 X Rs.500; 1 X Rs. 20] | புல்லரப்பாக்கம், நேரடி நெல் கொள்முதல் நிலைய வாளகத்தை ஒட்டினாற்போல் நிறுத்தப்பட்டிருந்த திரு. தணிகைவேல் என்பவருடைய திருமணத்தின் போது அன்பளிப்பாக கொடுத்து பயன்படுத்தி |

| | | | |
|---|---|---|---|
| | | | வருகிற Hundai Axcent White Colour TN 11 S 7585 என்ற காரின் Dashboardலிருந்து |
| 7) | திரு.M.தணிகைவேல், அவர்களின் சொந்த காரில் இருந்த white Colour Coverலிருந்து (புல்லரப்பாக்கம் என்று எழுதியிருந்தது) | ரூ.4500/- [ 9 X Rs.500] | புல்லரப்பாக்கம், நேரடி நெல் கொள்முதல் நிலைய வாளகத்தை ஒட்டினாற்போல் நிறுத்தப்பட்டிருந்த திரு. தணிகைவேல் என்பவருடைய திருமணத்தின் போது அன்பளிபாக கொடுத்து பயன்படுத்தி வருகிற Hundai Axcent White Colour TN 11 S 7585 என்ற காரின் Dashboardலிருந்து |
| 8) | திரு.M.தணிகைவேல், அவர்களின் சொந்த காரில் இருந்த மற்றொரு white Colour Coverலிருந்து (புல்லரப்பாக்கம் என்று எழுதியிருந்தது) | ரூ.1,150/- [2 X Rs.500; 3 X Rs.50] | புல்லரப்பாக்கம், நேரடி நெல் கொள்முதல் நிலைய வாளகத்தை ஒட்டினாற்போல் நிறுத்தப்பட்டிருந்த திரு. தணிகைவேல் என்பவருடைய திருமணத்தின் போது அன்பளிபாக கொடுத்து பயன்படுத்தி வருகிற Hundai Axcent White Colour TN 11 S 7585 என்ற காரின் Dashboardலிருந்து |

இந்த திடீர் கூட்டு தணிக்கையின்போது பருவகால பட்டியல் எழுத்தரின் அறையில் அவரது உதவியாளர் திரு.திருநாவுகரசு, திரு.G.டில்லி, த/பெ.கோவிந்தசாமி, திரு.தாமோதரன், திரு.செல்லையன் என்பவர் திரு.தணிகைவேல், பருவகால பட்டியல் எழுத்தருடன் இருந்தார்கள். எங்களை அறிமுகப்படுத்தியவுடன் திரு.டில்லி தனது Underware பாக்கெட்டிலிருந்த பணத்தை எடுத்து தூக்கி எறிந்தார். அந்த பணத்தை எடுத்து எண்ணி பார்க்கும்போது ரூ.60,000/- [ 22 X 2000; 32 X 500] இருந்தது. இந்த பணம் ரூ.60,000/-த்தை குறித்து திரு.டில்லி என்பவரை விசாரிக்க அவர் விவசாய ஆர்வலர்ஸ் குழு தலைவராக இருப்பதாகவும், தங்கள் குழுவில் 20 விவசாயிகள் இருப்பதாகவும், நெல் கொள்முதல் செய்யும் திரு.தணிகைவேலுக்காகவும் மற்றும் அவரது அலுவலகத்தில் உள்ளவர்களுக்காகவும் ரூ.25/-ம், நெல் கொள்முதலுக்கு கொண்டு வரும் போது கொள்முதல் செய்யப்படும் நெல்களை கனிபேக்கில் போட்டு, எடைபோட்டு தைக்கவும், லோடு ஏற்றவும், கூலி வேலை செய்பவர்களுக்கு கொடுக்க ரூ.25/-ம், இந்த கொள்முதல் நிலையம் செயல்படுகிற இடத்தை, வாடகைக்கு கொடுத்த திரு.அன்பு என்பவருக்கு தரைவாடகையாக கொடுக்க ரூ.10/- ம், ரூ.10/- தங்களது குழுவுக்கும், இந்த பத்துரூபாயிலிருந்து கொள்முதல் செய்கிற இடத்தை சுத்தம் செய்ய ரூ.2/-ம், மீதி இருக்கிற ரூ.8/- எங்களது குழுவுக்கும் எடுத்துக்கொள்வதாகவும், இதில் கொள்முதல் செய்யப்பட்ட மூட்டைகளுக்கு ரூ.50/-வீதம் ரூ.60,000/- திரு.தணிகைவேல் அவர்களிடம் லஞ்சம் பணம் கொடுக்க கொண்டுவந்ததாக கூறினார். எனவே ரூ.60,000/-த்தை வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

இந்த சோதனையின் போது தொடர்ந்து திரு.டில்லி என்பவரை சோதனை செய்ய அவர் அணிந்திருந்த வெள்ளைநிற சட்டை பாக்கெட்டிலிருந்து ரூ. ரூ.6,600/- [12 X Rs.500; 3 X Rs. 200 ] எடுத்து ஆஜர் செய்தார். இதுப்பற்றி விசாரிக்க இதில் கொள்முதல் செய்யப்பட்ட மூட்டைகளுக்கு ரூ.50/-வீதம் ரூ.6600/- திரு.தணிகைவேல் அவர்களிடம் கொடுக்க கொண்டுவந்ததாக கூறினார். எனவே ரூ.6,600/-ரையும் வழக்கின் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

இந்த சோதனையின் போது திரு.M. தணிகைவேல், பருவகால பட்டியல் எழுத்தர் அறையை சோதனை செய்யப்பட்டது. அதில் திரு.M. தணிகைவேல், பருவகால பட்டியல் எழுத்தர் பயன்படுத்திய இரும்பு மற்றும் Plywood tableலில் வலது பக்கம் இருந்த இரண்டு Drawerகள் சோதனை செய்ப்பப்பட்டது. அதில் அடியிலிருந்த பெரிய Drawerயை திறந்தபோது அதில் ரூ. ரூ.16,030/- [32 X Rs.500; 1 X Rs.20; 1 X Rs.10] இருந்தது. இதைப் பற்றி திரு.தணிகைவேலிடம் விசாரிக்க எங்கள் அலுவலகத்திற்காகவும், கூலி கொடுப்புதற்க்காகவும், விவசாய குழுவிலிருந்து வந்து கொடுத்த லஞ்ச பணத்தை பெற்று வைத்திருந்ததாக கூறினார். மேலும் தனக்கும் தனது அலுவலகத்தில் பணியாற்றியவர்களுக்காவும் ரூ.25/-ம் கூலி வேலை செய்யபவர்களுக்காக ரூ.25/-ம் ஆக மொத்தம் ரூ.50/-யை விவசாய குழுக்களிடமிருந்து லஞ்சமாக பணத்தை கேட்டு பெற்றதாகவும் கூறினார். எனவே இந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

இந்த சோதனையின் போது பருவகால பட்டியல் எழுத்தர் அறையிலிருந்த திரு.செல்லையன் என்பவரை சோதனையிடப்பட்டது. அதில் திரு.செல்லையன் தான் ஒரு விவசாயி என்றும், தான் விவசாயம் மூலம் அறுவடை செய்த நெல் கொள்முதல் செய்யும், நேரடி கொள்முதல் நிலையத்திற்கு தனது நெல்களை கொண்டு வந்ததாகவும், கொள்முதல் செய்யும் திரு.தணிகைவேல் அவர்களுக்கு செலவுக்கு கொடுக்க ரூ.15,000/- [ 30 X Rs.500] கொண்டு வந்ததாக தெரிவித்தார். எனவே இந்த பணம் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

இந்த சோதனையின் போது பருவகால பட்டியல் எழுத்தர் அறையிலிருந்த திரு.செல்லையன் என்பவரின் மகன் அரியை சோதனை செய்யப்பட்டது. சோதனையின்போது அவரிடமிருந்த ரூ. ரூ.1,16,000/- [58 X Rs.2000] எடுத்து ஆஜர் செய்தார். இதுப்பற்றி விசாரிக்க, தான் விவசாயம் மற்றும் கூலி வேலை செய்வதாகவும், ஏற்கனவே நேரடி கொள்முதல் நிலையத்தில் 204 நெல் மூட்டைகளை கொடுத்து உள்ளதாகவும், இன்று 15 நெல் மூட்டைகள் பிடிக்கக்கூடிய நெல்களை கொண்டு வந்ததாகவும், தான் தனது அண்ணன் ராமதாஸ் என்பவருடைய வங்கி கணக்கிலிருந்து எடுத்த பணம் ரூ.5,50,000/-லிருந்து தான்

அடகு வைத்த நகைகளை மீட்க ரூ.1,16,000/- கொடுத்ததாகவும், தான் அதை வைத்திருந்ததாகவும் தெரிவித்தார். மேலும் பல்வேறு இடங்களில் நகைகளை அடமானம் வைத்திருந்த ரசீதுகளையும் காண்பித்தார். மேலும் பில் இல்லாத அடமானம் வைத்திருக்கும் நகைகளையும் மீட்கவும் இந்த பணத்தை வைத்திருந்ததாக கூறினார். இந்த காரணம் ஏற்க தக்கதாக இருந்ததால் அந்த பணத்தை அவரிடமே திருப்பி ஒப்படைக்கப்பட்டது.

இந்த சோதனையின் போது பருவகால பட்டியல் எழுத்தர் திரு.M. தணிகைவேல் அவர்களிடம் அலுவலகத்திற்கு எப்படி வந்து போகிறீர்கள் என்று விசாரிக்க, திரு. தணிகைவேல் என்பவருடைய திருமணத்தின் போது அன்பளிபாக கொடுத்து பயன்படுத்தி வருகிற Hundai Axcent White Colour TN 11 S 7585 என்ற காரில் பணிக்கு வருவதாகவும், அந்த காரை தற்சமயம் தனது அலுவலகத்திற்கு ஒட்டினாற்போல உள்ள ரோட்டில் நிறுத்தி வைத்திருப்பதாகவும் கூறினார். திரு. தணிகைவேல் Hundai Axcent White Colour TN 11 S 7585 என்ற காரை காண்பிக்க, அக்கார் திறந்து சோதனை செய்யப்பட்டது. இச்சோதனையின்போது Dashboardலிருந்து ரூ.4,020/- [ 8 X Rs.500; 1 X Rs. 20] எடுக்கப்பட்டது. இது பற்றி விசாரிக்க தங்களது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், திருவள்ளூர் மண்டலத்திலிருக்கும் Business Sectionல் இருப்பவர்களாகிய திரு.நாகராஜ், திரு. முருகேசன் ஆகியோர்க்கு கொடுப்பதற்க்காக வெள்ளை கவரில் போட்டு வைத்திருந்ததாக கூறினார். மேலும் Dashboardலிருந்த மற்றொரு வெள்ளை கவரிலிருந்த ரூ.4500/- [ 9 X Rs.500] பற்றி விசாரிக்க, தங்களது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், திருவள்ளூர் மண்டலத்திலிருக்கும் Movement Sectionல் இருப்பவர்களுக்காக கொடுக்க வைத்திருந்ததாக கூறினார். மேலும் Dashboardலிருந்த மற்றொரு வெள்ளை கவரிலிருந்த ரூ.1,150/- [2 X Rs.500; 3 X Rs.50] அதுப்பற்றி விசாரிக்க தங்களது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், திருவள்ளூர் மண்டலத்திலிருக்கும் Computer Section இருப்பவர்களுக்காக கொடுக்க வைத்திருந்ததாக கூறினார். இந்த இரண்டு கவரின் உறையின் மீதும் Buss எனவும் , Comp எனவும் எழுதப்பட்டுள்ளது. இந்த மூன்று கவர்களையும் தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், திருவள்ளூர் மண்டலத்திலிருக்கும் Purchasing Officer திரு.ராஜ்குமார்

அவர்களிடம் கொடுக்க, தனது காரில் வைத்திருந்ததாக கூறினார். எனவே இந்த பணம் விசாரணைக்காக இந்த மூன்று வெள்ளை கவர்கள் மற்றும் அதிலிருந்த பணம் கைப்பற்றப்பட்டது.

இந்த கூட்டு தணிக்கையின் போது தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், திருவள்ளூர் மாவட்டம் என்ற எழுத்தப்பட்டிருந்த Token Register (பக்கம் 1 முதல் 14 வரை எழுதப்பட்டுள்ளது) விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. திரு.M. தணிகைவேல் மற்றும் திரு.D. சரத்குமார் என்பவருடைய வருகைபதிவேடு விசாரணைக்காக கைப்பபற்றப்பட்டது. தினக்கூலி (Load Man) வருகைபதிவேடு விசாரணைக்காக கைப்பபற்றப்பட்டது. தமிழ்நாடு நுகர்பொருள் வாணிப கழகம், காஞ்சிபுரம் மண்டலம் மூலம் ந.க.எண். அ7/1718/2020, நாள்.20.08.2020ல் கொடுக்கப்பட்டுள்ள நிலுவையில்லா சான்று நகலையும், திரு.M. தணிகைவேல் என்பவருக்கு Proceeding No. E2/000444/2020, dated 17.02.2020ல் கொடுக்கப்பட்ட Appointment Order, திரு.தணிகைவேல், பருவகால் பட்டியல் எழுத்தர் என்பவருக்கு காஞ்சிபுர மாவட்டத்திலிருந்து திருவள்ளூர் மாவட்டத்திற்கு மாற்றப்பட்ட செயல்முறை ஆணை எண்.இ2/0447/2020, நாள்.03.09.2020ன் நகல், திரு.தணிகைவேல், பருவகால் பட்டியல் எழுத்தர் என்பவருக்கு திருவள்ளூர் மாவட்டத்தில் புல்லரப்பாக்கம் நேரடி கொள்முதல் நிலையத்தில் பணியமர்த்திய செயல்முறை ஆணை எண்.இ5/1111/2018, நாள்.08.09.2020ன் அசல் ஆகியவற்றை கூட்டு தணிக்கை குழுவினரால் விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது.

இந்த சோதனையின் போது திரு.டில்லி என்பவர் தூக்கி போட்ட பணம் ரூ.60,000/-, அவரது பாக்கெட்டிலிருந்த எடுத்த ரூ.6,600/-, திரு.தணிகைவேல், பருவகால் பட்டியல் எழுத்தர் என்பவரது Table Drawerலிருந்து எடுத்த ரூ.16,030/-, திரு.செல்லையன் என்பவரிடமிருந்து எடுத்த ரூ.15,000/-, திரு. தணிகைவேல் பருவகால் பட்டியல் எழுத்தர் என்பவருடைய காரின் Dashboardலிருந்து மூன்று கவர்களிலிருந்து எடுத்த ரூ.4,020/-, ரூ.4500/- மற்றும், ரூ.1,150/- ஆக மொத்தம் ரூ.1,07,300/-ரை கூட்டு தணிக்கை குழுவினரால்

விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. இச்சோதனையின் போது திரு.அரி என்பவரிடமிருந்து கைப்பற்றப்பட்ட ரூ.1,16,000/-திருப்பி அவரிடமே ஒப்படைக்கப்பட்டது.

இந்த இருதுறை கூட்டுத்தணிக்கை இன்று (01.11.2020) இரவு சுமார் 12.30 மணிக்கு முடிக்கப்பட்டது. இந்த கூட்டுத்தணிக்கையின்போது அலுவலக பணிகளுக்கோ, பொது மக்களுக்கோ, உடமைகளுக்கோ எவ்வித பாதிப்புமின்றி உரிய முறையில் முடிக்கப்பட்டது. இந்த சோதனையின்போது பருவகால பட்டியல் எழுத்தர் அறையிலிருந்த திரு.டில்லி, திரு.தாமோதரன், திரு.செல்லையன், திரு.அரி, மற்றும் திரு.தணிகைவேல், பருவகால் பட்டியல் எழுத்தர், புல்லரபாக்கம் மற்றும் அவரது உதவியாளராக பணியாற்றிய திரு.திருநாவுக்கரக மற்றும் நேரடி கொள்முதல் நிலையத்தை தரை வாடகை விட்ட திரு.அன்பராசு மற்றும் அன்பராசுடைய மாமனார் திரு.P.ஜெகதீஷன் ஆகியோரிடம் தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது. மேலும் நேரடி நெல் கொள்முதல் நிலையத்தில் தினக்கூலிகளாக பணியாற்றிய திரு.புருஷோத்தமன், திரு.தசரதன், திரு.பாஸ்கர், திரு.ஜெயபால், திரு.யாக்கோபு, திரு.ஏகாம்பரம், திரு.விநாயகம், திரு.மூர்த்தி, திரு.திலக், திரு.மணிகண்டன், திரு.மேகவர்ணம், திரு.சங்கர், திரு.ஆறுமுகம், திரு.சரத்குமார் மற்றும் திரு.சுப்பிரமணி ஆகியோரிடம் தனித்தனியே வாக்குமூலம் பெறப்பட்டது.

ஒம்/-xxxx
திரு.சு. கோட்டிஸ்வரன்,
மாவட்ட துறை ஆய்வுக்குழும அலுவலர்,
மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம்,
காஞ்சிபுரம், திருவள்ளூர் மற்றும் செங்கல்பட்டு மாவட்டம்.

ஒம்/-xxxx
திரு.ம.வெற்றி செழியன்,
காவல் துணைக் கண்காணிப்பாளர்,
சென்னை நகரப் பிரிவு-IV, ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை, சென்னை-16.

ஒம்/-xxxx
திரு.M. தணிகைவேல்,
பருவகால பட்டியல் எழுத்தர்,
நேரடி நெல் கொள்முதல் நிலையம்,
புல்லரப்பாக்கம், காமராஜர் தெரு,
திருவள்ளூர் மாவட்டம்.

ஒம்/-xxxx
திரு. A.சிவஆனந்த்,
காவல் ஆய்வாளர், CC-I, V&AC, Chennai.

ஒம்/-xxxx
திருமதி. C.சசிகலா,
காவல் ஆய்வாளர், CC-I, V&AC, Chennai.

ஒம்/-xxxx
திருமதி.T. பவானிதேவி,
காவல் ஆய்வாளர், சென்னை நகரப் பிரிவு-1,
ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்புத்துறை,
சென்னை-16.

ஒம்/-xxxx
திரு.G.டில்லி, த/பெ.கோவிந்தசாமி, எண்.227, சீனிவாசன் தெரு, புல்லாபுரம், திருவள்ளூர்.

ஒம்/-xxxx
B. தாமோதரன், த/பெ.பலராமன், No.351, காமராஜ் தெரு, புல்லரப்பாக்கம், திருவள்ளூர்.

ஒம்/-xxxx
திரு.செல்லையப்யன், த/பெ.பரமசிவன், ப.எண்.18, பு.எண்.647, பெருமாள் கோவில் தெரு, காந்திநகர், புல்லரப்பாக்கம், திருவள்ளூர்.

ஒம்/-xxxx
திரு.உறரி, த/பெ.திரு.செல்லையப்யன், காந்திநகர், புல்லரப்பாக்கம், திருவள்ளூர்.

ஒம்/-xxxx
திரு.R. திருநாவுக்கரசு, த/பெ, ராமகிருஷ்ணன், எண்.205, துலுக்காணத்தம்மன் கோவில் தெரு, அரியப்பாக்கம், மதுராந்தகம்.

Sir,

Received the above complaint with enclosures, a case was registered in V&AC, CC-I Detachment Cr.No.03/AC/2020/CC-I, U/s 102 Cr.P.C. and Sec. 7 and 7(A) of Prevention of Corruption (Amendment) Act, 2018 on 01.11.2020 at 16.00 hrs. and took up investigation. The original FIR along with complaint enclosed with Joint Surprise Check Proceedings, statements of 1) Thiru.M.Thanigaivel, 2) Thiru.G.Dilli, 3) Thiru.B.Damodharan, 4) Thiru. P.Chellaiyan, 5) Thiru.C.Hari, 6) Thiru.R.Thirunavukarasu and copies of records are submitted before the Hon'ble Chief Judicial Magistrate cum Special Judge for cases under PC Act, Tiruvallur and copies are forwarded to superior officers concerned.

01/11/2020.
(A.SIVA ANANTH),
Inspector of Police,
Chennai City-I Dett.,
Vigilance and Anti Corruption,
Alandur, Chennai-16.